பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

03 02 2025 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தற்போது நடைபெற்று வருகிறது.
2. தில்லி சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைவதையடுத்து அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இறுதிக்கட்ட வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.
3. கடந்த வாரம் விண்ணில் செலுத்திய என் வி எஸ்-02 பயண வழிகாட்டி செயற்கைக்கோளை அதன் சுற்றுவட்டப்பாதையில் நிலைநிறுத்துவதில் ஏற்பட்டிருந்த பின்னடைவை சரி செய்யும் முயற்சிகள் நடைபெற்று வருவதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.
4. அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு இறக்குமதி வரியில் 25 சதவீதம் உயர்த்தப்படுவதாக கனடா அறிவித்துள்ளது.
5. ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் ஒடிஸா – வடகிழக்கு அணியை எதிர்கொள்கிறது.

<u>*----- இனி விரிவான செய்திகள் ----*</u>

**[]<<<>>>[]**

குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தற்போது நடைபெற்று வருகிறது.

முன்னதாக இன்று காலை மக்களவை கூடியதும் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளா கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக விவாதிக்க வேண்டுமென்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

இதையடுத்து பேசிய மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா, மக்களவை மற்றும் மாநிலங்களவை கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் உரையாற்றியபோது அது குறித்து தெரிவித்ததாக கூறினார்.

உறுப்பினர்கள் அனைவரும் அவை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போது உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்றும் திரு ஓம் பிர்லா கூறினார்.

மாநிலங்களவையிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதே கோரிக்கையை வலியுறுத்தினர்.

மகா கும்பமேளா சம்பவம் உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பாக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த ஒத்திவைப்பு நோட்டீஸுக்கு அவைத் தலைவர் திரு ஜக்தீப் தன்கர் அனுமதி மறுத்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ், சமாஜ்வாதி, ராஷ்ட்ரீய ஜனதாதள் உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

இதையடுத்து பேசிய திரு ஜக்தீப் தன்கர், அவை உறுப்பினர்கள் செய்பாடு கண்ணியமாக அமைய வேண்டுமென்றும், நாடாளுமன்றத்தில் ஆக்கப்பூர்வமான விவாதங்கள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்றும் தெரிவித்தார்.

[]<<<>>>[]

தில்லி சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

இங்கு வரும் ஐந்தாம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

அரசியல் கட்சிகளின் தலைவர்களும், வேட்பாளர்களும் இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

வேட்பாளர்கள் வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரித்து வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு அமித்ஷா இன்று ஜங்புறா, துவாரகா பகுதிகளில் நடைபெறும் பிரச்சாரக் கூட்டங்களில் பங்கேற்கிறார்.

பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா இன்று மொராரியில் நடைபெறும் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பங்கேற்று பேசுகிறார்.

ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் மற்றும் அக்கட்சியின் மூத்த தலைவரும் பஞ்சாப் முதலமைச்சருமான திரு பகவந்த் மான் ஆகியோரும் தில்லியின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்று தங்கள் கட்சி வேட்பாளருக்கு ஆதரவு திரட்டுகின்றனர்.

காங்கிரஸ் மூத்த தலைவர் திருமதி பிரியங்கா காந்தி, கஸ்தூரிபா நகர் பகுதியில் நடைபெறும் தேர்தல் பேரணியில் பங்கேற்கிறார்.

70 உறுப்பினர்களைக் கொண்ட தில்லி சட்டப்பேரவைக்கு நடைபெறவுள்ள தேர்தலில், பிஜேபி, ஆம் ஆத்மி, காங்கிரஸ் கட்சிகளுக்கு இடையே போட்டி நிலவுகிறது.

தில்லியில் வாக்குப்பதிவுக்காக 13 ஆயிரத்த 260 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தேர்தலை சுமூகமாகவும், அமைதியாகவும் நடத்த அனைத்து எற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

பதற்றமான வாக்குக்சாவடிகளில் கூடுதல் பாதுகாப்பு போடப்படுவதுடன், வெப் கேமரா மூலம் வாக்குப்பதிவு கண்காணிக்கப்படுவதாகவும் அது கூறியுள்ளது.

தமிழகத்தில் ஈரோடு சட்டப்பேரவைத் தொகுதி மற்றும் உத்திரபிரதேச மாநிலம் மில்கிபூர் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான பிரச்சாரமும் இன்று மாலை நிறைவடைகிறது.

இத்தேர்தலில் பதிவாகும் வாக்குகள் வரும் எட்டாம் தேதி தேதி எண்ணப்படுகின்றன.

இதனிடையே தில்லியில் வாக்குப்பதிவு நடைபெறும் வரும் ஐந்தாம் தேதி அன்று காலை ஏழு மணி முதல் மாலை ஆறரை மணி வரை தேர்தல் கருத்துக்கணிப்புகளை வெளியிட தடை விதிக்கப்படுவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.,

தொலைக்காட்சி சேனல்கள், செய்தி நிறுவனங்கள் உட்பட அனைத்து ஊடகங்களும் இதனை பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

இஸ்ரோ கடந்த வாரம் விண்ணில் செலுத்திய என் வி எஸ்-02 பயண வழிகாட்டி செயற்கைக்கோளை அதன் சுற்றுவட்டப்பாதையில் நிலைநிறுத்துவதில் ஏற்பட்டிருந்த பின்னடைவை சரி செய்யும் முயற்சிகள் நடைபெற்று வருவதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இஸ்ரோ வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், தற்போது செயற்கைக்கோள் சீராக இயங்கி வருவதாகவும், அதனை விஞ்ஞானிகள் தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் தெரிவித்துள்ளது.

செயற்கைக் கோளில் அமைக்கப்பட்டுள்ள சூரிய மின் தகடுகள் வெற்றிகரமாக செயல்படுவதாகவும் இஸ்ரோ கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்..

*(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)*

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் மகா கும்பமேளா வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது.

வசந்த பஞ்சமியையொட்டி இன்றும் லட்சக்கணக்கானோர் திரிவேணி சங்கமத்தில் நீராடி வருகின்றனர்.

இன்று அதிகாலை முதல் காலை எட்டு மணி வரை சுமார் 62 லட்சத்து 25 ஆயிரம் பேர் அங்கு புனித நீராடியதாகவும், இதுவரை சுமார் 35 கோடி பேர் புனித நீராடியதாகவும் உத்திரபிரதேச மாநில அரசு தெரிவித்துள்ளது.

அசம்பாவிதங்களை தவிர்க்க துணை ராணுவப் படையினர் உடபட 60 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இரண்டாயிரத்து 750 சி சி டி வி கேமராக்கள் மூலமாக பக்தர்கள் கண்காணிக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் கூறுகிறார்.

*சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)*

**[]<<<>>>[]**

தமிழக முன்னாள் முதலமைச்சர் அண்ணாதுரையின் 56-வது நினைவு தினம் இன்று மாநிலம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி திமுக சார்பில் கட்சித் தலைவரும், முதலமைச்சருமான திரு மு க ஸ்டாலின் தலைமையில் சென்னையில் அமைதிப் பேரணி நடைபெற்றது.

பேரணியின் இறுதியில் சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அண்ணா நினைவிடத்தில் திரு மு க ஸ்டாலின், மாநில அமைச்சர்கள், கட்சியின் மூத்த தலைவர்கள் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

அஇஅதிமுக சார்பில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தலைமையில் அக்கட்சியினர் அண்ணா நினைவிடத்தில் மரியாதை செலுத்தினர்.

காஞ்சிபுரத்தில் அண்ணாவின் நினைவு இல்லத்தில் உள்ள உருவச்சிலைக்கு ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

**[]<<<>>>[]**

2047-ஆம் ஆண்டில் வளர்ச்சியடைந்த இந்தியா என்பதை பிரதிபலிக்கும் வகையில் வரும் நிதி ஆண்டுக்கான பட்ஜெட் அமைந்திருப்பதாக ஆந்திர மாநில முதலமைச்சர் திரு என சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியாவின் வளர்ச்சியை உலக நாடுகள் உற்று நோக்கி வருவதாகக் கூறினார்.

சமீபத்தில் டாவோஸில் நடைபெற்ற உலக பொருளாதார மன்ற மாநாடு அதற்கான சான்றாக விளங்கியதாவும் அவர் தெரிவித்தார்.

உலக அரங்கில் பொருளாதாரத்தில் இந்தியா முன்னிலைபெறுவதில் செயற்கை நுண்ணறிவு முக்கிய பங்கு வகிக்கும் என்று திரு சந்திரபாபு நாயுடு குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மத்திய பட்ஜெட்டில் பல்வேறு வரவேற்க தக்க அம்சங்கள் இடம்பெற்றுள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

ஆண்டு வருமானம் 12 லட்சம் ரூபாய் வரை பெறுவோருக்கு வருமான வரி விலக்கு அளிக்கப்பட்டிருப்பது, விவசாயிகளுக்கான வேளாண் அட்டைக்கான கடன் உச்சவரம்பு உயர்த்தப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்று விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த பொதுமக்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

*( சவுண்ட்பைட் - பொதுமக்கள் ) -- 45 செகண்ட்*

**[]<<<>>>[]**

அமெரிக்காவில் நடைபெற்ற கிராமி விருதுகள் விழாவில் பக்தி இசை ஆல்பம் பிரிவுக்கான விருது இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட சந்திரிகா டாண்டனுக்கு வழங்கப்பட்டது.

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் திரிவேணி எனும் இசை ஆல்பத்திற்காக அவருக்கு இந்த விருது அளிக்கப்பட்டது.

**[]<<<>>>[]**

அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு இறக்குமதி வரியில் 25 சதவீதம் உயர்த்தப்படுவதாக கனடா தெரிவித்துள்ளது.

நாளை முதல் இது அமல்படுத்தப்படும் என்றும் அந்நாடு தெரிவித்துள்ளது.

மெக்ஸிகோவும் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரியை உயர்த்த இருப்பதாக அறிவித்துள்ளது.

கனடா, மெக்ஸிகோ நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25 சதவீதம் இறக்குமதி வரி உயர்த்தப்படுவதாகவும், சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு பத்து சதவீதம் உயர்த்தப்படும் என்று அமெரிக்கா அறிவித்திருந்தது.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை கனடா பிரதமர் திரு ஜஸ்டின் ட்ரூடோ-வும், மெக்ஸிகோ அதிபர் கிளாடியா **sheinbaum-**வும் இரு தலைவர்களும் தொலைபேசி வாயிலாக பேச்சு நடத்தியுள்ள நிலையில், இந்த அறிவிப்பினை இரு நாடுகளும் வெளியிட்டுள்ளன.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்துப் போட்டியில், இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் ஒடிசா அணி - ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியை எதிர்கொள்கிறது.

புவனேஸ்வரில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

சென்னை ஓப்பன் டென்னிஸ் போட்டியின் பிரதான சுற்று ஆட்டங்கள் இன்று தொடங்குகின்றன.

இப்போட்டிகள் வரும் ஒன்பதாம் தேதிவரை நடைபெறுகின்றன.